# மெட்ரோ ரயிலில் 20 லட்சம் பேர் பயணம்

■ சென்னை

மெட்ரோ ரயில் கட்டணம் குறைக்கப்பட்டதால், பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதன்படி, கடந்த மாதத்தில் மட்டும் 20.54 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர்.

இது தொடர்பாக சென்னை மெட்ரோ ரயில் அதிகாரிகள் கூறியதாவது: கரோனா ஊரடங்கு தளர்வுக்கு பிறகு, சென்னையில் மெட்ரோ ரயில் சேவை கடந்த செப்டம்பர் 7-ம் தேதி மீண்டும் தொடங்கப்பட்டது. அதன்பிறகு பயணிகள் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகிறது. குறிப்பாக, கட்டணம் குறைக்கப்பட்ட பிறகு பயணிகள் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது. அதன்படி, கடந்த பிப்ரவரி மாதத்தில் மட்டும் 20.54 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர். கரோனா ஊரடங்கு தளர்வுக்கு பிறகு இதுவரையில் மொத்தம் 65 லட்சத்து 50 ஆயிரம் பேர் பயணம் செய்துள்ளனர். வரும் நாட்களில் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.